International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20-3 July - September 2026

Published on 14, Jul - Sep 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# சவ்வாதுமலை மலையாளி பழங்குடிகளின் தொழில்கள்

**இரா. மகாலெட்சுமி,** முனைவர்பட்ட ஆய்வு ஆய்வாளர்
கடல்சார் வரலாறு கடல்சார் தொல்லியல் துறை
**முனைவர் சு. இராசவேலு,** பேராசிரியர் (ஓய்வு), நெறியாளர்
கடல்சார் வரலாறு கடல்சார் தொல்லியல் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழகத்தின் நிலவியல் அமைப்பானது குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்று அவற்றின் தன்மை மக்கள் வாழ்க்கை சமூக அமைப்பு, வழிபாட்டு முறைகளை ஒட்டி பிரித்து வழங்கப்பட்டதை சங்க இலக்கியங்கள் சுட்டுகின்றன. வரலாற்றுக்கு முற்பட்ட பழங்கற்காலத்திலிருந்தே தமிழகத்தில் தொல்மாந்தர் வாழ்ந்து வருகின்றதை தொல்லியல் கண்டுபிடிப்புகள் வழி அறிய முடிகிறது. ஒவ்வொரு இனமும் தங்கள் முன்னோர்கள் செய்துவந்த தொழில்களை வழி வழியாக செய்து வந்தனர். பிந்தைய காலகட்டத்தில் அவரவர் செய்கின்ற தொழிலை வைத்தே அந்த இனம் அடையாளப்படுத்தப்படும் அளவிற்கு அவை வளர்ச்சியடைந்ததை பார்க்க முடியும். தொழில்கள் அவர்கள் வாழ்கின்ற இடம், தட்பவெப்ப நிலையினைப் பொருத்து மாறுபடுகின்றன. அந்த வகையில் சவ்வாதுமலையில் வாழும் மலையாளிப் பழங்குடிகளின் தொழில்கள் காலந்தோறும் ஏற்பட்டுள்ள மாற்றங்களை எடுத்துரைக்கும் விதமாக இக்கட்டுரையானது அமைந்துள்ளது.

This study examines the occupations of the Malayali tribal communities inhabiting the Javadi Hills (Savadhu Malai) of Tamil Nadu and analyses the transformations in their traditional livelihood patterns over time. The occupational practices of tribal societies are closely connected with their geographical environment, climate, and socio-cultural traditions. The Malayali tribes of Javadi Hills have historically depended upon agriculture as their principal occupation, alongside hunting, honey collection, animal husbandry, wood cutting, and wage labour. Based on literary, anthropological, and field-based perspectives, this paper highlights how these occupations evolved from subsistence-oriented activities to diversified livelihood strategies. Hunting and honey collection, once integral to their survival, have declined due to forest and wildlife protection laws. Agriculture continues to remain their primary occupation, though shifts from subsistence farming to commercial crop cultivation are evident. Traditional methods such as shifting cultivation and rain-fed agriculture still survive in certain areas. Livestock rearing and wage labour supplement household income, while migration to urban centres for employment has increased. Educational advancement and government welfare measures have enabled some

members of the community to enter professional and administrative sectors. The study demonstrates that occupational changes among the Malayali tribes reflect broader socio-economic transformations while preserving aspects of their indigenous cultural identity and traditional knowledge systems.

**முதன்மைச் சொற்கள்**

சவ்வாது மலை, மலையாளி பழங்குடிகள், தொழில்கள், வேளாண்மை, பழங்குடியினர், தேன் எடுத்தல், கால்நடை வளர்ப்பு, கூலித்தொழில், இடம்பெயரும் வேளாண்மை, வாழ்வாதார மாற்றங்கள்.

**முன்னுரை**

ஒரு இனத்தை தனித்து அடையாளப் படுத்துவது அவர்களின் தொழிலாகும். தொழில் ஒரு இனத்தை அடையாளப் படுத்துவது மட்டுமல்லாமல் அவர்களின் வாழ்வாதரமாகவும் திகழ்கின்றது. கிழக்குத் தொடர்ச்சி மலைத்தொடரில் அமைந்துள்ள சவ்வாதுமலையானது திருவண்ணாமலை, திருப்பத்தூர், வேலூர் மாவட்டங்களை உள்ளடக்கியதாக அமைந்துள்ளது. இதில் திருப்பத்தூர் மாவட்டத்திற்குட்பட்ட சவ்வாது மலையில் முப்பத்திரண்டு கிராமங்களில் மலையாளி பழங்குடிகள் வசித்து வருகின்றனர். இவர்கள் பல்வேறு தொழில்களைச் செய்து தங்கள் வாழ்க்கையினை நடத்தி வருகின்றனர். பொதுவாக பழங்குடிகள் என்றால் வேட்டையாடுதல், பழங்கள் சேகரித்தல், கைவினைத் தொழில்களில் ஈடுபடுவர். சவ்வாதுமலை மலையாளிகள் வேளாண் தொழிலை முக்கியத் தொழிலாக கொண்டு வாழ்ந்து வருகின்றனர். வேளாண் தொழில்கள் தவிர தேன் எடுத்தல், மரம் வெட்டுதல், கால்நடை மேய்ப்பு போன்ற தொழில்கள் அவர்களின் தொன்றுதொட்ட தொழில்களாக இருந்து வருகின்றது. சுதந்திரம் பெற்ற பின் மலையின மக்களுக்கான அரசின் மேம்பாட்டு திட்டங்களினால் இன்று இப்பகுதியில் வாழுகின்ற மலையாளிகள் படித்து பட்டம் பெற்று அரசு நிறுவனங்களில் உயர்பதவிகளிலும் பணியாற்றி வருகின்றனர். எனினும் இப்பகுதியில் வாழும் ஒவ்வொரு குடும்பமும் தங்கள் பூர்வீகத் தொழிலாக வேளாண்மையை தொன்று தொட்டு செய்துவருபவர்களாக வாழ்ந்து வருகின்றனர்.

**வேட்டையாடுதல்**

மனித இனம் தோன்றி தன் உணவு தேவைகளுக்காக வேட்டை சமூக வாழ்க்கையை மேற்கொண்டனர். இந்நிலைகளில் காட்டு மிராண்டிநிலை, நாடோடி நிலை, உணவு சேகரித்தல் நிலை என்ற மூவகை வாழ்க்கை நிலையை கொண்டிருந்தனர். வரலாற்றுக்கு முற்பட்ட காலத்து மக்களின் வாழ்க்கை அமைப்பு நாடோடி வாழ்க்கை முறையினைக் கொண்டிருந்தது. அவர்கள் முதலில் காட்டுமிராண்டி நிலையில் வாழ்ந்தனர் என்பதையும் பின்னர் அவர்களுக்குத் தேவையான உணவு, வாழ்க்கைச் சூழல் கருதி இடம்விட்டு இடம் பெயர்ந்து செல்லும் நிலையில் நாடோடிகளாய் வாழ்ந்தனர் என்பதையும் அறிய முடிகின்றது. பழங் காலத்தில் வேட்டையாடுதல் இனக்குழு வாழ்க்கையாகக் கொள்ளலாம். தமிழகத்தில் பெருங்கற்காலத்தின் இறுதிப் பகுதியும் சங்க காலத்தின் தொடக்க காலமும் இனக்குழுச் சமூகத்தின் காலம் எனக் கூறலாம். வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் மக்கள் இனக்குழு அமைப்பாகச் செயற்பட்டிருக்கக் கூடும் என்பதைக் காணமுடிகிறது. அம்மக்களின் உணவு சேகரிக்கும் காலத்தினை வேட்டைக் காலம் எனலாம். வேட்டைத் தொழில் பண்டைய விவசாய முறையைக் கொண்ட காலம் கால்நடைவளர்ப்புக் காலம் ஆகிய காலங்களில் மந்திரத்திற்குப் (சடங்குகள்) பெரும் பங்கிருந்தது என்பதை அறிய முடிகிறது.

பண்டையத் தமிழகத்தில் வாழ்ந்த மானுட சமுதாயம் வேட்டைச் சமுதாயமாக இருந்து காடுகளில் கிடைக்கும் பொருட்களை சேகரித்தும், பறவைகள், விலங்குகளை வேட்டையாடிக் கூட்டாக அனுபவித்தனர். சவ்வாதுமலை மலையாளிகள் வேட்டையாடுதல் தங்களின் முக்கியத் தொழில் என்று

கூறுகின்றனர். இவர்கள் முற்காலங்களில் ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்கள் ஒரு குழுவாக சேர்ந்து தங்கள் வேட்டைச் சாமியினை வணங்கி விட்டு வேட்டைக்கு செல்வதை வழக்கமாக கொண்டிருந்தனர். அப்பொழுது கைகளில் ஈட்டி, அருவால், வரை, கொம்பு, தீ பந்தத்தை கைகளில் எடுத்துக்கொண்டு போவார்களாம். அது மட்டுமின்றி வேட்டைக்கு வேட்டை நாய்க ளையும் அழைத்துச் செல்வார்கள். இவர்கள் காட்டுப்பன்றி, முள்ளம்பன்றி, உடும்பு, மான், முயல், காடை, கௌதாரி, புறா, மைனா, கானாங்கோழி, கின்னிக்கோழி போன்றவற்றை வேட்டையாடி வருவார்கள் என்றும் அவ்வாறு வேட்டையாடும் போது எந்த விலங்கினை வேட்டையாட விரும்புகின் றார்களோ அந்த விலங்கு, பறவையினைப் போன்று ஒலி எழுப்புவதும், அவற்றை வெளியே கொண்டுவருவதற்கான சத்தத்தை எழுப்புவதற்கும் இவர்கள் அறிந்து வைத்துள்ளனர். பறவை, விலங்குகளுக்கு கன்னி வைத்துவிட்டு பதிவிருந்து அவை மாட்டியவுடன் அதை எடுத்துச் செல்வதும், சில விலங்குகள் ஓடிக்கொண்டிருக்கும் போதே அதை கல், ஈட்டி, கொம்புகளால் குறி பார்த்து அடித்துப் பிடிக்கவும் கற்றறிருந்துள்ளார்கள்.

வேட்டையில் கிடைத்தப் பொருட்களை எல்லோரும் பங்கிட்டுக்கொள்வர். எஞ்சிய மாமிசத்தைப் பதப்படுத்தி வைத்துக் கொள்ளும் முறையினையும் இவர்கள் அறிந்துள்ளனர். ஆனால் வனப்பாதுகாப்பு சட்டம், வனவிலங்குகள் வதைத் தடுப்புச் சட்டங்கள் இயற்றப்பட்ட பிறகு வேட்டை யாடும் தொழிலை தற்பொழுது இங்கு வாழும் மக்கள் செய்வதில்லை என்றும் கூறுகின்றனர். வேட்டையாடுதல் காலங்கால மாக தங்கள் முன்னோர்கள் செய்துவந்த தொழில் அவை தற்போது இல்லாமல் இருப்பது வருத்தமளிப்பதாகவும் இதற்கு அரசாங்கம் அனுமதி வழங்கவேண்டும் என்றும் இவர்கள் கூறுகின்றனர்.

**தேன் எடுத்தல்**

சவ்வாது மலை அடர்ந்த காடுகள், புதர்கள், உயரமான மரங்கள், பூச்செடிகளும் நிறைந்து காணப்படுகின்றன. மலைகளிலும், மரங்களிலும் தேனீக்கள் கூடுகட்டியிருப்பதை கள ஆய்வின் போது பார்க்கமுடிகிறது. இம்மலையின மக்களின் முக்கியமான தொழில்களில் ஒன்று தேனெடுத்தல் ஆகும். தேன் எடுக்கும் முறையினை தேனழித்தல் என்று கூறுகின்றனர். இம்மக்கள் தேனினை தங்களது உணவிற்கும், விற்பனைக்கும், மருத்துவத்திற்கும் பயன்படுத்துகின்றனர். தேன் எடுக்க செல்லும் போதும் குழுவாக சென்று தேனெடுத்துப் பங்கிட்டுக் கொள்கின்றனர். இம்மலையில் கொம்புத் தேன், மலைத்தேன், அடுக்குத்தேன், கொசுத் தேன் (கொசத் தேன்) என நான்கு விதமான தேன்கள் காணப்படுகின்றன. ஒவ்வொரு தேனின் தன்மை, நிறம், சுவை, மனம், ஆகியவை தேனின் வகைகளுக்கு ஏற்ப மாறுபடும் என்றும் கூறுகின்றனர். அது போலவே தேன் எடுக்கும் முறையும் தேனின் வகைகளுக்கு ஏற்ப மாறுபடுகின்றன. பெரும் பாலும் நெருப்பு புகை போட்டு தேன் எடுக்கும் முறை பின்பற்றப்படுகின்றன. தேன் எடுக்க கையில் கத்தி, தீ பந்தம் போன்றவற்றை எடுத்துச் செல்கின்றனர். தேன் இவர்களின் மூலிகை மருத்துவத்தில் முக்கிய இடம் வகிக்கின்றன. வனத்துறை யின் அனுமதியோடு காட்டுக்குள் சென்று வருகின்றனர்.

**வேளாண்மை**

இனக்குழுக்கள் நிலம் சார்ந்தும், அதன் சூழல் சார்ந்தும் இருந்திருக்கின்றனர். எந்த ஒரு சமூகமும் நிலத்தின் அடிப்படைக் காரணியைக் கொண்டே அமையும். இது மாதிரியான திணைப்பாகுபாடுகள் மானுடவியல் விளக்கத்திற்குப் பொருந்தி வருவதை ஸ்ரீநிவாச ஐயங்கார் எடுத்துரைக் கிறார். உணவசேகரிப்பவர்களாக இருந்தவர் கள் உற்பத்திக்கு மாறும் பொழுது அவர்களி டம் வேளாண்மைக்கான கருவிகள் இல்லை. உழுகருவிகள் கண்டறியப்படாத காலத்தில் பன்றிக்குப் போட்டியாக வந்தவர்களே

மனிதன் என்று மானுடவியல் அறிஞர்கள் கூறுகின்றனர். கேழல் (ஆண்பன்றி) நிலத்தில் உள்ள கிழங்குகளைத் தோன்டிய போது மண் புழுதியாக இருந்தது. அந்நிலத்தில் கானவர் (குறிஞ்சி, முல்லைநில மக்கள்) தினை விதைப்புப் பற்றித் தொல்குடிகளி டையே இருந்ததை

**அருவி ஆர்க்கும் கழை பயில் நனந்தலை**

**கறிவளர் அடுக்கத்து மலர்ந்த காந்தள்**

**கொழுங் கிழங்கு மிளிரக் கிண்டி கிளையோடு**

**கடுங்கண் கேழல் உழுத பூழி** - புறம்.168:1-4

என்று புறநானூற்றுப் பாடல் சுட்டுகிறது. மானிடவியல் அறிஞர்கள் வேளாண் தொழில் பற்றிப் பழங்குடிகளின் தோட்டப் பயிர் முறைகளைக் கொண்டு விளக்குகின்ற னர். தொடக்கக்காகலத்தில் உழுது பயிரிடாமல் எளிய கருவிகளைக் கொண்டு நிலத்தைக் கொத்தித் தோண்டுகழி (Digging - Stick) போன்ற எளிய கருவிகளை முதன்மையான கருவிகளாகப் பயன்படுத்தி வேளாண்மை செய்தனர். இந்தியப் பழங்குடி கள் இடம் பெயரும் வேளாண்மையைச் செய்துவந்தனர். இவ்வகையான முறையை 'கோமன்' (Koman) என்று குறிப்பிடுகின்ற னர். வேளாண்மை பழங்குடி மக்களிடமி ருந்து வந்தது என்பது மானிடவியல் கோட் பாடு களால் உறுதிசெய்யப்படுகின்றது.

மனித வரலாற்றில் நாடோடி வாழ்க்கை முறையிலிருந்து, மனிதன் ஓரிடத்தில் தங்கி நிலையாக வாழும் வாழ்க்கை முறைக்கு வித்திட்டது வேளாண்மை ஆகும். ஆரம்பக் கால கட்டங்களில் நீர்வளம் மிகுந்த ஆற்று ஓரங்களில் வேளாண்மை செழித்து நடை பெற்றது அது போலவே மலைப்பகுதிகளி லும், மலைச்சரிவானப் பகுதிகளிலும் வேளாண்மை நடைபெற்று வருகின்றன. கடுமையான உடல் உழைப்பும் தொழில் முனைப்பும் கொண்ட சவ்வாது மலை மலையாளிகளின் முக்கியத் தொழிலாகக் தற்போது விளங்குவது வேளாண்மையாகும். மலையாளிகள் தங்கள் சொந்த நிலங்களி லும் கூலிக்கும் வேளை செய்கின்றனர். வானம் பார்த்த பூமியாக இருந்த இப்பகுதி நாளடைவில் கிணற்றுப் பாசனம் மூலம் வேளாண்மை செய்யப்படுகின்றது. ஆனாலும் பெரும்பாலும் வானம் பார்த்தே இங்கு விவசாயம் மேற்கொள்ளப் படுகின்றன. தற்போது மின் இணைப்புப்பெற்று ஆழ் குழாய்க்கிணறு கொண்டும் வேளாண்மை சிறப்பாக நடைபெறுகிறது. சவ்வாது மலைப் பகுதியில் புதிய கற்காலத்தின் எச்சங்களான கற்கருவிகள் கிடைப்பதிலிருந்து இங்கு வேளாண்மை புதிய கற்காலத்தில் இருந்து தொடங்கியது எனக் கருதலாம். இக்கற் கருவிகளைப் பயன்படுத்தி நிலத்தை கிளறி சிறிய அளவில் தங்களுக்குத் தேவையான பயிற்களை வளர்த்தனர். இவ்வகை கருவிகள் நிலத்தைக் கிளறவும் தோண்டவும் கிழங்கு களை எடுக்கவும் விலங்குகளை வேட்டை யாடவும் பயன்படுத்தப்பட்டது.

தமிழகத்தில் தென்மேற்குப் பருவக்காற்று மற்றும் வடகிழக்குப் பருவக்காற்றுகள் ஜூன் மாதம் துவங்கி அக்டோபர் மாதம் வரையில் வீசுகின்றன. தென்மேற்குப் பருவக் காற்றானது உயரமான மேற்குத் தொடர்ச்சி மலையினைக் கடந்து வீசுவதில்லை இதனால் தமிழ்நாட்டிற்கு போதுமான நீர்வளம் இதன்மூலம் கிடைப்பதில்லை என்றாலும் இக்காற்றுப் பாலக்காட்டுக் கணவாய் வழியாக சவ்வாதுமலை, சேர்வரா யன் மலைகளில் மோதி இப்பகுதியில் சிறிதளவு மழை பெய்கின்றன. ஆனால் வடகிழக்குப் பருவக்காற்றானது அக்டோபர் முதல் நவம்பர் மாதம் முழுவதும் வீசுகின் றன இதில் தமிழ்நாட்டிற்கு நல்ல மழை பெய்வதுண்டு.சவ்வாதுமலை பெய்யும் மழை யானது நன்செய் பயிர்களை பயிர் செய்வதற்கு ஏற்றதாக இல்லாவிட்டாலும் இம்மலையானது புன்செய் பயிர்கள் விளை விப்பதற்கு (சிறுதானியங்கள்) பெருந்துணைப் புரிகின்றது. அதுமட்டுமல்லாமல் இம்மலை யில் செம்மண் மற்றும் களிமண் நிறைந்து காணப்படுவதால் இவை சிறுதானியங்கள் பெருமளவில் விளைவிக்கப்படுவதற்கு ஏற்ற தாக உள்ளன. இம்மலைமக்கள் தங்களது

பாரம்பரிய முறையினைப் பின் பற்றியே பெருமளவில் வேளாண்மையினை செய்து வருகின்றனர். இவர்களது வேளாண்மை முறையில் காட்டெரிப்பு விவசாயம் முக்கியத் துவம் வாய்ந்ததாக காணப்படுகின்றன. பொதுவாக மலையும் மலைசார்ந்த குறிஞ்சி நிலப் பகுதிகளில் காட்டெரிப்பு விவசாயம் பரவலாகக் காணப்படுகின்றன. மலைச்சரி வானப் பகுதிகளில் படிக்கட்டுகள் போன்ற அமைப்பில் நிலங்களை சரிசெய்து விவசாயம் செய்கின்றனர். மேட்டுப்பகுதிகள் இன்றும் வானம் பார்த்த விவசாயமுறையே காணப்படுகின்றன. முந்தையக் காலகட்டங் களில் இம்மலைமக்கள் தங்களின் உணவுத் தேவைக்காகவே விவசாயங்களை மேற் கொண்டனர் தங்கள் தேவைப் போக மீதமுள்ளதை சந்தைகளுக்கு எடுத்துசென்று அதை விற்று அதற்கு மாற்றாக தங்களுக்குத் தேவையான மற்றப் பொருள்களை வாங்கி வந்தனர். ஆனால் தற்போது இந்நிலை மாறி பணப்பயிர்கள் அதிக அளவில் உற்பத்தி செய்யப்படுகின்றன.

### காட்டெரிப்பு வேளாண்மை அல்லது இடம் பெயரும் வேளாண்மை

காட்டெரிப்பு வேளாண்மை முறையிலிருந்தே தற்போதைய சமநில வேளாண்மை முறை வளர்ச்சிப் பெற்றது. காட்டுப் பகுதி அல்லது மலைப்பகுதியில் வாழும் பழங்குடிகள் அவர்கள் வாழும் குடியிருப்புப் பகுதிக்கு அருகில் ஓர் இடத்தினை தேர்வு செய்து அங்குள்ள காட்டை அழித்து அதை தீயிட்டு கொளுத்தி அப்பகுதியினை உழுது அந் நிலத்தினை பயிரிடுவதற்கு ஏற்றார்போல் பண்படுத்தி பயிரிடுவர். அவ்வாறு கொழுத்தப்படும் சாம்பல்கள் அந்நிலத்திற்கு நல்ல உரமாக காணப்படுவதாக நம்புகின்றனர். இந்நிலத்தில் 3 முதல் 5 ஆண்டுகள் வரை பயிரிடுவர் பின் அந்நிலத்தை விட்டு வேறொரு இடத்தை தெரிவு செய்து இம்முறையினைப் பின்பற்றுவர் இதனை காட்டெரிப்பு வேளாண்மை அல்லது இடம் பெயரும் வேளாண்மை என்று கூறுவர். இது அனைத்து பழங்குடி மக்களிடமும் காணப்படும் வேளாண்மை முறையாகும். ஆனால் இது தற்போது குறைந்துவிட்டது. இவ்வேளாண் முறை சவ்வாதுமலை மலையாளி பழங்குடி களிடம் காணப்படுகின்றன. சித்திரை, வைகாசி மாதங்களில் காட்டெரிப்பு நிலத்தை தயார் செய்து வைத்துக் கொண்டு, ஆனி, ஆடி மாதங்களில் விதைக்கின்றனர். முன்பு ஒருவருடைய நிலத்தில் காட்டெரிப்பு விவசாயம் செய்யும் போது அவ்வூர் மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து அந்நிலத்தை சுத்தம் செய்வதாகவும் அவர்களுக்கு ஊதியமென்று தனியாக ஏதும் வழங்காமல் அன்றைக்கான உணவினை வேலை செய்தவர்களுக்கு அந்நிலத்தார் அளிப்பத் தாகவும் கூறுகின்றனர். இரவு நேரங்களில் அவர்களுக்கு சாராயம் வாங்கி தருவார்கள் என்றும் கூறுகின்றனர். தற்போது இந்நிலை மாறி அவர்களுக்கு ஊதியம் வழங்கப் படுகின்றன. காட்டெரிப்பு விவசாய நிலங் களில் நல்ல விளைச்சல் காணப் படுவதாகவும் கூறுகின்றன.

### சாகுபடி பயிர்கள்

சவ்வாது மலைப்பகுதியில் காணப்படும் மண்வளம், நீர்ப்பாசனம், தட்பவெப்ப நிலை க்கு ஏற்றார்போல் இங்கு பயிர்கள் விளைவிக்கப் படுகின்றன. சிறுதானியப் பயிர்கள் பெருமளவில் விளைவிக்கப் படுகின்றன. கேழ்வரகு, கம்பு, சாமை- (வெள்ள சாமை, கருஞ்சாமை, கொத்து சாமை, ஐயாரெட்டுசாமை), திணை, வரகு, நெல் - (துளசி, நர்மதா, லெட்சுமி, சமுத்திரா, வெள்ளை பொன்னி, மஞ்சள் பொன்னி, மணவாரி, பவானி, மடுமுழுங்கி), மூங்கில் அரிசி, சோளம் போன்ற தானியங்களும் அவரை, துவரை, உளுந்து, கொள்ளு, மொச்சைப் போன்ற பயிர்வகை களும், எள், வேர்க்கடலை, ஆமணக்கு போன்ற எண்ணெய் வித்துப் பயிர்களும், காக்கடை, அரும்பு, செவ்வந்தி போன்ற பூ வகைகளும் இம்மலையில் விளைவிக்கப் படுகின்றன. மேலும் இம்மலைகளில் பலா, மா, தேக்கு, சந்தனம் போன்ற மரவகைகள் மிகுந்த அளவில் விளைகின்றன. மேலும் மா, பலா, வாழை மரங்களில் இருந்து

விளைகின்ற பழங்களை சந்தைகளில் விற்றும் வாழ்கின்றனர். இம்மலைத்தொடரில் தமிழகத்தின் முக்கனிகளான மா, பலா வாழை அதிக அளவில் தற்பொழுது விளைவிக்கப்படுகின்றது.

### கால்நடை வளர்ப்பு (மேய்ச்சல் தொழில்)

சவ்வாது மலையாளிப் பழங்குடி மக்களின் தொழில்களில் ஒன்றாக கால்நடை வளர்ப்பு உள்ளது. கால்நடைகளை வளர்ப்பது மட்டுமே தொழிலாகக் கொள்ளாமல் வேளாண்மையோடு கால்நடை வளர்ப்பினையும் செய்கின்றனர். இவர்கள் ஆடு, மாடுகளை வளர்ப்பதோடு கோழி, பன்றியினையும் வளரக்கின்றனர். பெரும்பாலும் ஒவ்வொரு வீட்டிலும் கருப்புப் பன்றியினை வளர்க்கின்றனர். ஏனெனில் திருமணம், இறப்பு சடங்குகளில் முக்கிய உணவாக பன்றி இறைச்சி உள்ளது. தங்கள் நிலங்களில் ஆடு, மாடுகளுக்கென தனியாக பட்டியினை அமைத்து மற்ற காட்டு விலங்குகளோ, திருடர்களோ திருடி செல்லாதவாறு பாதுகாக்கின்றனர். இவ்வாறு கால்நடைகளை உணவிற்குப் பயன்படுத்துவது மட்டுமின்றி அவற்றை பாதுகாக்கவும் மறப்பதில்லை. இம்மலைவாழ் மக்கள் மாட்டிறைச்சி உண்பதில்லை ஆனால் மாடுகளை இவர்கள் வளர்க்கின்றனர். அவற்றை விவசாயம், பால், விற்பனைக்காக வளரக்கின்றனர். மேய்ச்சல் இடங்களில் கால்நடைகளை விட்டு மேய்ப்பது, இலை தலைகளை வெட்டிப் போடுதல் அவற்றிற்கு தண்ணீர் காட்டுதல், பராமரித்தல் என தாங்கள் வளர்க்கும் விலங்குகளை நன்கு பராமரிக்கின்றனர். இக்கால்நடைகளை வளர்த்து விற்பனை செய்து தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்துக் கொள்கின்றனர். பெரும்பாலும் வீட்டிலிருக்கும் முதியவர்கள், பெண்கள் மேய்ச்சல் தொழிலைச் செய்கின்றனர்.

### கூலித்தொழில்

இங்குள்ள மக்கள் தங்கள் சொந்த நிலங்களில் விவசாயம் செய்வது மட்டுமல்லாது கூலிவேலைக்கும் செல்கின்றனர். மலையிலே தங்கள் நிலங்களில் வேலைசெய்ய தங்கள் உறவினர்களை அழைப்பதும் தங்கள் உறவினர் நிலங்களில் இவர்கள் சென்று வேலை செய்வது மட்டுமின்றி கூலிக்கும் வேலை செய்கின்றனர். காலையில் ஒன்பது மணிக்கு வேலைக்கு சென்று மாலை ஐந்து மணி வரை வேலை செய்கின்றனர். நடவு நடுதல், களை எடுத்தல், கொத்து வேலை, வரப்பினை சரிசெய்தல், ஏர் உழுதல், வேலியமைத்தல், நிலத்தை சரிசெய்தல், விதை விதைத்தல், அறுப்பு அறுத்தல் என போன்ற பணிகளில் ஆண், பெண் இருவரும் கூலி வேலை செய்கின்றனர். சிலநேரங்களில் வனத்துறைக்காக மலைக்காடுகளை வெட்டுதல், காய் கனிகளை பறித்துக் கொடுத்தல் போன்ற வேலைகளை செய்துக் கொடுக்கின்றனர்.

### மரம் வெட்டுதல்

சவ்வாது மலை உயரமான மரங்களால் நிறைந்துள்ள மலைப்பகுதியாகும். இங்குள்ள மக்கள் ஆரம்பக் காலங்களிலிருந்தே மரம் வெட்டும் தொழிலை ஈடுபட்டு வருகின்றனர். வீடு கட்டுவதற்கும், வீட்டிற்குத் தேவையான கட்டுமானப் பொருட்களை செய்வதற்கும் மரங்களை வெட்டிப் பயன்படுத்துகின்றனர். வனப் பாதுகாப்பு சட்டத்திற்குப் பிறகு காட்டிலுள்ள மரங்களை வெட்டுவது தடை செய்யப்பட்டுள்ளது. ஆனால் தங்கள் சொந்த நிலங்களில் வைத்துள்ள மரங்களை தங்களின் தேவைகளுக்கு ஏற்றார்போல் வெட்டிப் பயன்படுத்துகின்றனர். மரம் வெட்டுதல் இவர்களின் தொழில்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. இங்குள்ள முதியவர் ஒருவர் கூறும்போது ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் இம்மலையிலுள்ள சந்தன மரங்கள் பெருமளவில் வெட்டப் பட்டதாகவும் அவற்றை வெட்டுவதற்கு இங்குள்ளவர்களையே அழைத்து செல்வார்கள் என்றும் கூறுகிறார். இன்றும் கூலிக்கு மரம் வெட்டும் தொழிலை செய்து வருகின்றனர். குத்தகைக்கு விடப்படும் பகுதிகளிலுள்ள மரங்களை வெட்டுவதற்கும் இங்குள்ள மக்களையே அழைத்துச் செல்கின்றனர்.

### பிறதொழில்கள்

மலையிலே கூலிக்கு வேலை செய்வது மட்டுமின்றி விதை விதைத்த பின் மூன்று முதல் ஆறு மாதங்கள் அறுவடை வரை வேலையின்றி இருக்கும் காலத்தில் பெருநகரங்களான சென்னை, பெங்களூர், திருப்பூர், ஆந்திரா, போன்ற நகரங்களுக்கு சென்று கம்பெனிகளில் வேலைசெய்தல், கல்லுடைத்தல், கட்டடவேலை செய்கின்றனர். காட்டுமரங்களைக் குத்தகைக்கு எடுத்தோருக்குக் காய்கனிகளைச் கூலிக்கு சேகரித்துக் கொடுத்தல் போன்ற வேலைகளையும் செய்கின்றனர்.

இம்மலையிலுள்ள மலையாளிகளில் சிலர் நன்கு படித்து அரசு அதிகாரிகளாகவும் இருக்கின்றனர். வழக்குறைஞர், ஆட்சியர், காவல்துறை, கிராமபஞ்சாயத்து அலுவலர், ஆசிரியர், வங்கிகளிலும் மற்றும் அனைத்துத் துறைகளிலும் பணிப்புரிகின்றனர். இந்நிலையானது இம்மலை மக்களின் வாழ்வியல் முன்னேற்றத்தைக் காட்டுவதோடு மட்டுமல்லாமல் ஒரு சில வருடங்களுக்கு முன்பிருந்தே இங்குள்ள மக்கள் கல்வியின் முக்கியத்து வத்தை அறிந்திருப்பதை நம்மால் அறிந்துக் கொள்ள முடிகிறது. அதே போல் இம்மலை மக்கள் அரசாங்கம் அளிக்கும் 100 நாள் வேலையினை செய்கின்றனர். விவசாயங்கள் இல்லாத காலகட்டங்களில் இவ்வேலையே தங்களுக்கு பெருந்துணை புரிவதாகவும் கூறுகின்றனர்.

வேட்டைச்சமுதாயமாக இருந்த இப்பழங்குடி சமூகம் படிப்படியாக வேளாண் சமூகமாக மாறியிருப்பது சிறிதுகாலத்தில் தோன்றியவையல்ல அவைப் படிபடியாக ஏற்பட்ட மாற்றமாகும். அவை நாகரிகத்தின் வளர்ச்சி என்று கூறுவர். சவ்வாதுமலை மலையாளிகள் ஆரம்பநிலையில் தங்கள் தேவைக்காக பயிர் செய்தனர். தற்போது இந்நிலை மாறி பணப் பயிர்கள் அதிக அளவில் விளைவிக்கப் படுகின்றன. அரசின் உதவியாளும் தொழில் வளர்ச்சியில் ஏற்பட்டுள்ள மாற்றத்தினாலும் அவர்களின் அன்றாட வாழ்வில் மாற்றங் களும் முன்னேற்றங்களும் ஏற்பட்டுள்ளது. சூழ்நிலைக்கும் காலத்திற்கும் தகுந்தார் போல் இம்மலைமக்கள் தங்களை கட்டமைத்துக் கொள்கின்றனர். தொழில் வளர்ச்சி இம்மக்களின் வாழ்வியல் வளர்ச்சிக்கு வித்திட்டிருப்பதையும் காலந் தோறும் தொழில்களிலும் மாற்றங்கள் நிகழ்ந்துள்ளதையும் இக்கட்டுரை வெளிக் கொணந்துள்ளது.

### நோக்கீடு

1. Deviprasad Chattopadhyaya, Lokayata, A Study in Ancient Indian Materialism, New Delhi,1959,pp.94-95
2. P.T.Srinivasa Iyengar, History of Tamils up to 600 A.D, Asian Educational Survives, New Delhi,1989, p.4-12
3. *தொல். பொ. 589,* Tamil Lexicon Vol.II, University of Madras,1980-1982, p.1096
4. Ibid, Vol.II, p.912
5. *புறநானூறு.168:1-4*
6. *பக்தவத்சல பாரதி, பண்பாட்டு மானிடவியல், மெய்யப்பன் தமிழாய்வகம், சிதம்பரம், 2003, ப.467*
7. D.N.Majumdar & T.N.Madan, A Introduction to Social Anthropology, Asia Publishing House, Bombay, 1961 p.197
8. *முன்னர் குறிப்பிட்டது, பண்பாட்டு மானிடவியல், ப.467*

### நேர்காணல்

1. *வே. பொன்னுரங்கன், வயது 53, மொழலை, நாள்: 28.07.2024*
2. *சு. பாக்கியம், வயது 47, வலுதலம்பட்டு, நாள்: 06.9.2024*
3. *லெ. காளியம்மாள், வயது 60, நடுகுப்பம். நாள்: 9.12.2025*
4. *ரா. அனுமன், வயது 49, கோம்பை, நாள்: 24.01.2026*